

இனிய துவக்கம்

உங்கள் Computer ல் **Photoshop** (மென்பொருள்) Software இருக்கும் என்று நம்புகிறேன். ஒரு வேளை இல்லாவிட்டால் பரவாயில்லை. கட்டாயம் போட்டோஷாப் 7 இருக்கும். இல்லை என்றால் உடனே Install செய்யவும். (போட்டோஷாப் 7 & CS2 க்கும் இப்புத்தகம் பயன்படும்.)




மேலே படத்தில் பார்ப்பது போல் உள்ள Desk Topல் Photoshop Icon ஐ டபுள் கிளிக் செய்து அதனைத் திறக்கவும். சில வினாடிகளில் பல விதமான மாயாஜாலங்களைப் புரியும் போட்டோஷாப் தன்னை உருவாக்கியவர்களின் பெயர்கள் மற்றும் சில விவரங்களுடன் திறந்துவிடும்.



மேலே படத்தில் பார்ப்பது **Adobe Photoshop CS (Version 8)**ஐ உருவாக்கியவர்களின் பெயர்கள், மற்றும் சில விவரங்களுடன் திறக்கும். இதில் வரும் சில பெயர்கள் Version ஐ ப் பொருத்து மாறுபடும். போட்டோஷாப்பை உருவாக்கியவர்களில் முக்கியமானவர்கள் பலர் இந்தியர்களும், தமிழர்களும் என்பது நமக்குப் பெருமை.

இதுதான் Photoshop Welcome Screen



1. போட்டோஷாப்பின் அத்தியாவசிய சில நூல்களின் அடிப்படை விஷயங்களை மட்டும் உங்களுக்கு கற்றுத்தரும் பகுதி (Help menu வைப் போன்றது) இவற்றின் முழு விபரங்கள் அறிய ஆங்கில அறிவும், பொறுமையும் மிக அவசியம்.

2. இதை கிளிக் செய்தவுடன் உங்கள் கம்ப்யூட்டரில்ப் இணையதளம் வசதி இருந்தால் Internetல் Connect ஆகி விடும். அதில் போட்டோஷாப் CSன் Advanced Techniquesன் விவரங்கள் வரும்.

3. போட்டோஷாப் CSக்கு முந்திய Version போட்டோஷாப் 7ஐ விட இதில் உள்ள நவீன முன்னேற்றத்தின் விவரம் அடங்கிய CDயை பயன்படுத்தும் விவரம்.

4. போட்டோஷாப்CS ல் Effectகள் மூலம் பல வித்தைகள் புரிவது எப்படி என்ற விவரம்.(PDF formatல் உள்ளது)

5. நிறங்களின் அடிப்படை விவரங்கள் (RGB & CYMK)


6.& 7. போட்டோஷாப்பின் (இலவசமாக) இணைந்து வரும் மென்பொருள் Adobe Image Ready . இதில் Image Readyயை எப்படி பயன்படுத்துவது என்ற விபரமும், போட்டோஷாப் CSயில் புதிதாக சேர்க்கப்பட்ட பகுதிகளின் தொகுப்பும் உள்ளது.

8. Internetல் போட்டோஷாப் CS ன் இன்றைய அல்லது அடுத்த மாற்றங்களின் விவரம். (Photoshop CS2)

9. இதை கிளிக் செய்தால், அடுத்த முறை நீங்கள் போட்டோஷாப் CS திறக்கும்போது இந்த Welcome Screen பட்டியல் வராது.


10. இதை கிளிக் செய்தால் தான் நாம் போட்டோஷாப் CSன் ஆரம்ப நிலைக்கு போகமுடியும்.

(வாருங்கள் உற்சாகத்துடன் செல்வோம்)



மேலே படத்தில் உள்ளது போல் போட்டோஷாப் open ஆகிவிடும். அதில் வலதுபுறம் உள்ள மூன்று பேலட்களை, (Palette) அதன் வலது ஓரத்தில் உள்ள கிளிக் செய்து தற்போது மூடிவிடவும். அதன் விவரங்களை பிறகு பார்ப்போம். (உங்களது முந்தைய setting ஐ பொறுத்து பேலட்கள் இல்லாமலும் போட்டோஷாப் open ஆகும்)

பல விதமான பேலட்களை உள்ளன. அதன் விவரங்களை, சற்று கவனத்துடன் தனித்தனியாக Window Menuவில் பார்ப்போம்.



1.Marquee Tool +3
2. Move Tool
3. Lasso Tool + 2
4. Magic Wand Tool
5. Crop Tool
6. Slice Tool +1
7. Healing Brush Tool + 2
8. Clone Brush Tool + 1
9. Clone Stamp Tool + 1
10. Histroy Brush Tool + 1
11. Eraser Tool + 2
12. Gradient Tool + 1
13. Blur Tool + 2
14. Sponge Tool + 2
15. Path Selection Tool + 1
16. Text Tool + 3
17. Pen Tool+ 4
18. Shape Tool + 5
19. Notes Tool + 1
20. Eye Dropper Tool + 2
21. Hand Tool
22. Zoom Tool
23. Set Foreground Tool
24. Set Background Tool
25. Default foreground
Background Node
26. Double Headed Arrow
27. Edit in Standard Mode
28. Edit in Quickmask Mode
29. Standard Screen Mode
30. Full Screen Mode with Menu Bar
31. Full Screen Mode
32. Jump to Image Ready
33. Edit in Image Ready

Main Tools : 33
Hiden Tools : 34

Title Bar :



Title Bar இது தான் நாம் எந்த Softwareல் தற்போது பணி செய்கிறோம் என்ற விபரத்தை இடது புறத்தில் காட்டுகிறது.(Photoshop) இதன் வலதுபுறத்தில் 3 சிறிய கட்டங்கள் உள்ளது. 

 Minimise இதை கிளிக் செய்தால் போட்டோஷாப்பை சிறியதாக மாற்றி திரையின் (screen) இடதுபுறம் கீழே அனுப்பும்.

 Maximise இடதுபுறம் கீழே சிறிதாக உள்ள போட்டோஷாப்பை பழைய நிலைக்குக் கொண்டு வரும்.


 Close இது போட்டோஷாப்பை மூடி விட்டு வெளியேற உதவும்.

Image Title Bar :




இதில் மேலும் கூடுதலாக File Name, File Format, Zoom Size, Color Mode & Bit Size போன்ற விவரங்கள் தெரியும்.

Menu Bar :



MenuBar இதில் 9 விதமான கட்டளைகள் (Command) உள்ளது. ஒவ்வொன்றிலும் பல விதமான கட்டளைகள் உள்ளடங்கி உள்ளன.


Option Bar :



Option Bar இதுதான் மிக முக்கியமான பகுதி. Tool Boxல் உள்ள பலவிதமான டூல்களைப் பயன்படுத்தும் போது, குறிப்பிட்ட அந்த டூல்க்கு தகுந்தாற்போல மாறும் தன்மையுள்ளது இந்த Option Barதான். நாம் பயன்படுத்தும் அனைத்து டூல்களையும் Option Bar தான் நம் தேவைக்கு ஏற்ப சிறப்பாக இயக்குகிறது.

(அவசியம் தேவையான டூல்களுக்கு Option Bar ன் விளக்கம் (Values) தந்துள்ளேன். மற்றவற்றுக்கு அவர்கள் செய்யும் வேலைக்கு ஏற்ப தேவையைப் பொறுத்து அதன் மதிப்பு மாறுபடும்.)

Status Bar :




Status Bar இது திரையின் கீழ்ப் பகுதியில் இருக்கும். இதில் நாம் Open செய்து இருக்கும் File/ Photoவின் அளவு Zoom Size, File Size, போன்ற விபரங்கள் இருக்கும்.

(Zoom Size ஐ இங்கேயும் மாற்றி அமைக்கலாம்). ஒரு குறிப்பிட்ட பெரிய இமேஜில் (file) வேலை செய்யும் போது Processing Level ஐ காண்பிக்கும்.

மேலும் நாம் பயன்படுத்தும் சில டூல்களுக்கேற்ப சில விவரங்கள் காண்பிக்கும்.

Tool Box :




Tool Box இதுதான் மிக மிக முக்கியமான பகுதி.  இதன் தலையில் உள்ள Blue Color கட்டத்தை டபுள் கிளிக் செய்தால் தற்காலிகமாக மூடிவிடும். மீண்டும் அதை டபுள் கிளிக் செய்தால் பழைய நிலைக்கு வந்து விடும்.

 இது தான் போட்டோஷாப் CS ன் Icon. இதை கிளிக் செய்தால் நம் Computerல் Internet Connection இருந்தால் நேரடியாக www.adobe.com என்னும் Adobe Photoshopன் இணையதளத்திற்குச் செல்லும் . அங்கு போட்டோஷாப் பற்றிய அனைத்து விவரங்களும் கிடைக்கும்.

இனி வரிசையாக மற்ற டூல்களைத் தொடர்ந்து பார்ப்போம். இப்போது Tool Box பயன்களை சற்று விபரமாகவும், கவனமாகவும் பார்போம். காரணம் நம் அனைத்துத் தேவைக்கும் அதிகம் பயன்படுவது இந்த Tool Box தான். இதில் 33 டூல்களும் அதனுள் 34 Sub Tool களும் உள்ளன். மொத்தம் 67 டூல்கள் உள்ளன. பல டூல்களின் வலது கீழ்ப்புறமாக சிறிய முக்கோணம் இருந்தால் அங்கு ஒன்றுக்கு மேற்பட்ட டூல்கள் உள்ளது என்று அர்த்தம்.

முதலில் அனைத்து டூல்களின் பெயர்களையும், அதன் Short-cut Keyயையும் மனதில் கொள்ளவும். அதற்கு மவுஸை நகர்த்தி குறிப்பிட்ட டூல்லில் சில வினாடிகளில் வைக்கவும் அதன் பெயரும், Shortcut key களும் வரும். அதைக் கவனமாக மனதில் கொள்ளவும்.

Marquee Tool :



Marque Tool இதில் மொத்தம் 4 வகையான டூல்கள் உள்ளது. Rectangle Marquee Tool, Elliptical Marquee Tool, Single Row Marquee Tool,Single Column Marquee Tool (இதில் அதிகம் பயன்படுவது முதல் 2 மட்டுமே)கீழே படத்தில் Marquee Toolகளின் பல தேர்வு பகுதிகளைப் பார்க்கவும்



Tool Box ல் உள்ள (1,3,4) அதாவது Marquee Tool, Lasso Tool & Magic wand Tool ஆகிய இந்த மூன்று டூல்களையும் Selection Tools என்றும் சொல்லலாம். இவை மூன்றுக்கும் அதிக ஒற்றுமைகள் உள்ளன. நான் அடுத்து அடுத்து வரும் பாடங்களில் Selection Tool என்று சொன்னால், இந்த மூன்று டூல்களில் ஏதாவது ஒன்று அல்லது மூன்றுக்கும் பொது என்று,அர்த்தம் கொள்ளவும் காரணம் இவை மூன்று டூல்களும் அனைவருக்கும் மிக, மிகப் பயன் உள்ளதாகும்.

Selection Toolகளின் பயன்கள் ஒரு படத்தின் நாம் விரும்பிய பகுதியை (குறிப்பிட்ட டூலின் தன்மைக்கு ஏற்ப) தேர்வு செய்த பிறகு, அந்த இடத்தை நீக்க, நகர்த்த, வெட்டி எடுக்க, வெட்டியதை வேறு இடத்திற்கு எடுத்துச் செல்ல, நிறம் மாற்ற, நகல் எடுக்க, அளவை மாற்ற, புதிய நிறம் / பேட்டன் நிரப்ப இப்படி இன்னும் பல பல.... வகைகளில் மாற்றங்கள் செய்யப் பயன்படுகிறது.

Rectangle Marquee Tool :




இந்த டூலைப் பயன்படுத்தி ஒரு படத்தில் தேவைப்படும் இடத்தில் மவுஸை கிளிக் செய்தவாறு Drag செய்தால் அந்த இடம் தேர்வு ஆகிவிடும். இப்போது மேலே குறிப்பிட்ட பல வகையான மாறுதல்களை தேர்வு செய்த இடத்தில் செய்யலாம்.

Elliptical Marquee Tool :



இதுவும் Rectangle Tool ஐ போலத்தான் உருவம் (Shape) மட்டும்தான் மாறும். வட்ட வடிவமாக.

குறிப்பு: Rectangle & Elliptictal Toolஐப் பயன்படுத்தும்போது, Shift Keyயை அழுத்தியபடி Drag செய்தால் மிக சரியான சதுரம் / வட்ட வடிவம் வரும். அதே Alt Keyயை அழுத்தியபடி Drag செய்தால் 4 திசையிலும் சரியாக பரவி துல்லியமாக தேர்வு செய்ய உதவும்.




Option Bar : இதிலும் 4 விதமான பயன்கள் உள்ளது.




New Selection :

படத்தின் எதாவது ஒரே ஒரு பகுதியை மட்டுமே தேர்வு செய்ய முடியும்.




Add to Selection :

ஏற்கனவே நாம் தேர்வு செய்த பகுதியுடன், புதிதாக மீண்டும் பல பகுதியை ஒரே நேரத்தில் தேர்வு செய்யலாம்.




Subtract to Selection :

ஏற்கனவே நாம் தேர்வு செய்த பகுதிகளில் சில பகுதிகளை நீக்க உதவும்.




Interact to Selection :


இரண்டு தனி, தனி பகுதிகளில் ஒரு குறிப்பிட்ட இடத்தைத் தேர்வு செய்யலாம்.




Feather :




முக்கியமாக அதிகம் பயன்படும் Option ஆகும். படத்தின் ஒரு பகுதியை எந்த Selection Tool மூலம் தேர்வு செய்தாலும் அதன் வெட்டுப் பகுதி (Cutting Edge) Sharp ஆக இருக்கும். ஆனால் Feather (value) மதிப்பு நம் தேவைக்கு ஏற்ப பொதுவாக 1 முதல் 5 வரை கொடுத்த பிறகு, தேர்வு செய்த பகுதியை வெட்டி , நகர்த்தி, திருத்திப் பார்த்தால் அதன் ஓரங்கள் நம் Feather Value ஐப் பொறுத்து Smooth ஆகவும், அழகாகவும் இருக்கும். பொதுவாக நம் அனைத்து வேலைக்கும் (தொழிலுக்கும்) Feather கொடுப்பது மிக அவசியம்.





Original Image (without Feather)

Feather Values :



5 px



10 px




15 px



25 px

Style :

இதில் மூன்று Optionகள் உள்ளது.




Normal: எப்போதும் பொதுவாக உள்ளது


Fixed Aspect Ratio: Height & Width ல் நாம் கொடுக்கும் மதிப்பின் அடிப்படையில் சிறிது அல்லது பெரிதாகத் தேர்வு ஆகும்

Fixed Size: Width & Height ல் நாம் கொடுக்கும் அளவில் அப்படியேத் தேர்வு ஆகும். கிளிக் செய்தால் மட்டும் போதும். (மிக சுலபமான option)

Move Tool :



இது அதிகம் பயன்படும் முக்கியமான டூல்களில் ஒன்று. படத்தை ஓரிடத்திலிருந்து வேறு இடம் மாற்றவும், சிறிது நகர்த்தவும் பயன்படும். பல லேயர்களாக உள்ள Psd Fileல் குறிப்பிட்ட லேயரை ரைட் கிளிக் செய்து தேர்வு செய்யப் பயன்படும். மேலும் நாம் தேர்வு செய்த குறிப்பிட்ட பகுதியையும் எழுத்துகளையும் (Text) தேவையான இடத்திற்கு நகர்த்தவும் பயன்படும்.




(Psd Fileன் *லேயர் பட்டியல்*)


இப்படிப் பல தேவைகளுக்கு இந்த Move Tool பயன்படுகிறது. இதன் அம்புக்குறி இடத்திற்குத் தகுந்தாற்போல் ஐந்து விதமாக மாறும் தன்மையுடையது. (உபயோகித்துப் பார்க்கவும்.)

<u>லேயர் தேர்வு:</u> மேலே படத்தில் பார்ப்பது பல (லேயர்) அடுக்குகளைக் கொண்ட Photoshop File ஆகும். நமக்குத் தேவையான ஒரு லேயரை தேர்வு செய்ய, OptionBarஇல்உள்ளAutoSelectLayerதேர்வு செய்திருந்தால், கிளிக் செய்து நமக்குத்தேவையான லேயரைத்தேர்வு செய்யவும்.


இதே Psd Fileல் ஒன்றின் மீது ஒன்றாக பல லேயர்கள் இருந்தால் இந்த Auto Select சில சமயம் சரியாக இயங்காது. அப்போது தேவையான லேயர் மீது சரியாக ரைட் கிளிக் செய்தால் அந்தக் குறிப்பிட்ட லேயரின் மேலும், கீழும் உள்ள பல லேயர்களை பட்டியலிட்டுக் காட்டும்.அதில் தேவையான லேயரை கிளிக் செய்து தேர்வு செய்யவும்.



Move Toolல் Duplication: இது மிகச் சுலபமாக அதிகம் பயன்தரும் செயல். அதாவது Psd Fileல் ஒரு லேயரை தேர்வு செய்யவும், JPEG Fileல் குறிப்பிட்ட தேர்வுப் பகுதி அல்லது முழுப் படத்தை Alt Key பிடித்தபடி நகர்த்தினால் போதும். நீங்கள் விரும்பிய பகுதி இன்னும் ஒன்று வந்துவிடும். (Alt Key அழுத்தியவுடன் Move Toolன் வடிவம் மாறுவதை கவனிக்கவும்). இது "UPs" என்று சொல்லப்படும். ஒரு படத்தை பல (copies) பிரதிகள் எடுக்க மிக, மிகப் பயன்தரும்.




Option Barல் உள்ள **Auto Select** சில நேரம் மிகச் சுலபமாகவும், சில நேரம் கடினமாகவும் இருக்கும். Auto Select Tick (Select) செய்து இருந்தால் இடது Buttonஐ கிளிக் செய்து Photoshop file இல் உள்ள லேயரை தேர்வு செய்ய வேண்டும். இல்லை என்றால் Right Buttonகிளிக் செய்து தேர்வு செய்யவும்.



Bounding Box: தேர்வு செய்த பகுதியின் சுற்றளவு சரி பார்க்க .

Lasso Tool :



இதில் Lasso Tool, Polygonal Lasso Tool, Magnetic Lasso Tool என்று மூன்று வகைகள் உள்ளது. இது நாம் பார்க்கும் இரண்டாவது Selection Tool ஆகும். இது நாம் ஏற்கனவே பார்த்த MarqueeToolகளை விட நேர்மாறானது. அதில் நாம் குறிப்பிட்ட Shapeகளில் மட்டுமே தேர்வு செய்ய முடியும். ஆனால் இந்த Lasso Toolகளில் படத்தின் குறிப்பிட்ட பகுதியை அல்லது படத்தில் உள்ள ஒரு நபரை Cutoutஜ போல அழகாகத் தேர்வு செய்து, தனியாக வெட்டி எடுக்க அதிகளவு பயன்படுகிறது.


Lasso Tool :

ஒரு படத்தின் குறிப்பிட்ட பகுதியை சுமாராக தேர்வு செய்வதற்கு மட்டுமே பயன்தரும். நம் அவசரத் தேவைக்கு மட்டும் இதை பயன்படுத்த வேண்டும். மவுஸில் கிளிக் செய்து (கை எடுக்காமல்) ஆரம்பித்த இடத்திலே முடிக்கவும். நாம் தேர்வு செய்த இடத்தில் வருவது தான் Dotted line. இனி ஏற்கனவே குறிப்பிட்ட படி நம் தேவைக்குப் பயன்படுத்தலாம்.



Polygonal Lasso Tool :


Lasso Toolகளில் இதுதான் மிக முக்கியமான, அருமையான, சுலபமான டூல் ஆகும். இதைக் கவனத்துடன் படித்து, பல முறை செய்து பழகவும். இது நேர் கோடுகளாகத் தான் வரும் (சதுரம், செவ்வகம், முக்கோணம், பாலிகான்) ஆனாலும் நாம் தான் அதை நம் தேவைக்கு ஏற்ப வளைவு கோடுகளாகப் பயன்படுத்த வேண்டும்.படத்தில் நமக்குத் தேவைப்படும் இடத்தில் கிளிக் செய்து மவுஸை சிறிது நகர்த்தவும், ஒரு புதிய கோடு குறிப்பிட்ட படத்தின் ஓரத்தில் வரும். அதுதான் நாம் தேர்வு செய்கின்ற இடம். அது சரி என்றால் மீண்டும் ஒரு கிளிக் செய்யவும்.அவ்வளவுதான் இதே போல் தொடர்ந்து தேவைப்படும் இடத்தில் நகர்த்தி தொடர்ந்து கிளிக் செய்து வரவும்.இறுதியாக ஆரம்பித்த இடத்தில் நிறைவு செய்யவும்.



குறிப்பு: Select Toolகளால் தேர்வு செய்த பிறகு Feather Value வை தேவைக்கு ஏற்ப கொடுத்த பிறகு Edit / Fill / Color Correction செய்தால் மிகச் சரியாக இருக்கும். வெட்டிய சுவடு தெரியாது.

Magnetic Lasso Tool :






இது மிக மிகச் சுலபமான டூல். ஆனால் சில சந்தர்ப்பங்களில் இது உதவாது.போட்டோஷாப் ஆரம்பநிலையில் உள்ளவர்கள் இதை பயன்படுத்தலாம். படத்தில் நாம் தேர்வு செய்கின்ற பகுதி அதனைச் சுற்றி உள்ள கலரில் (Background Color) இருந்து வேறுபட வேண்டும். எதிர்மறை நிறமாக (Contrast) இருந்தால் தான் இது முழு பலன் தரும். இல்லை என்றால் இந்த டூல் அதிகம் உதவாது.

ஆனால் இந்த டூல் நாம் தேர்வு செய்கின்ற பகுதியின் ஓரத்தில் மவுஸை நகர்த்தினால் மட்டும் போதும் அதுவே தானாக Dotted Lineஐ ஏற்படுத்தும். நமக்கு மிகச் சரி என்று தோன்றும் இடத்தில் கிளிக் செய்து stoperஐ ஏற்படுத்தவும் ஆரம்பித்த இடத்தில் டபுள் கிளிக் செய்து முடிக்கவும்.


குறிப்பு: தேர்வின் போது தவறுகள் ஏற்பட்டால் உடனே Delete Key (or) Backspace ஐ அழுத்தி தவறைத் திருத்திய பிறகு மீண்டும் தொடரவும்.

(ஒரிஜினல் படத்தில் Lasso டூல்லின் தேர்வுப் பகுதி..)




முழுப் படத்தில் நமக்குத் தேவையானவரை மட்டும் Lasso டூலில் தேர்வு செய்யவும். தேர்வு செய்த பிறகு,

ரைட் கிளிக் செய்து feather கொடுக்கவும். அடுத்து move டூல் கிளிக் செய்து தேவையான இடத்தில் நகர்த்தவும்.




நமக்குத் தேவையான பகுதி மட்டும் தனியாக வெட்டி எடுக்கப்பட்டுள்ளது.

வெட்டி எடுக்கப்பட்ட பகுதியில் நமக்குத் தேவையான Back-ground, Pattern, Color, Gradient எது வேண்டுமோ கொடுக்கவும்.(நிரப்பலாம்)




Magic wand Tool :

தமிழில் இதற்கு மந்திரக்கோல் என்று அர்த்தம். படத்தில் நமக்குத் தேவைப்படும் ஒரே நிறம் உள்ள இடத்தை இந்த டூல் மூலம் தேர்வு செய்யலாம். படத்தின் Background ஒரே நிறத்தில் இருந்தால், அதில் இந்த டூல் மூலம் கிளிக் செய்து அதை நீக்க, அல்லது வேறு நிறத்தை நிரப்பி அதனை நம் விருப்பத்திற்கேற்ப மாற்றலாம்.



Option Bar :



New Selection, Tolerance (பொதுவாக) 30, Anti alias & Contiguous தேர்வு ஆக வேண்டும்.

Tolerance மதிப்பு குறைய அதன் சுற்றளவு (தேர்வுப் பகுதி) குறையும். மதிப்பு அதிகரிக்க அதன் சுற்றளவு கூடும்.


குறிப்பு: ஏற்கனவே தேர்வு செய்த இடத்துடன் மீண்டும் புதிதாக Shift Keyயைப் பிடித்து கிளிக் செய்தால், நீங்கள் கிளிக் செய்யும் புதிய இடமும் தேர்வு ஆகும். Alt Key பிடித்து கிளிக் செய்தால் நேர்மாறான விளைவு ஏற்படும். அதாவது ஏற்கனவே தேர்வு செய்த பகுதி தேர்விலிருந்து நீக்கப்படும்.

Crop Tool :

படத்தில் நமக்கு நிரந்தரமாகத் தேவைப்படும் குறிப்பிட்ட பகுதியை மட்டும் இந்த Crop Tool மூலம் சதுரமாகத் தேர்வு செய்து, Enter Key தட்டி தேவையற்ற பகுதியை நீக்கலாம். (இதன் மூலம் தேர்வு செய்த பகுதி ஒரு தனி file ஆக மாறி விடும்)




Orginal Image



Cropping Image




நமக்குத் தேவையான (தேர்வு) பகுதி மட்டும் பளிச் என்று இருக்கும்



இது option barல் வரும் இரண்டும் optionகள்.

⊘ கிளிக் செய்தால் Crop நின்று விடும்.

✓ கிளிக் செய்தால் Crop ஆகிவிடும்.



Croped Image

கவனம்: முக்கிய பகுதியை நீக்கிய பிறகு திரும்பப் பெற முடியாது.